**ஒதுக்கீட்டுத் தலைப்பு 317**

---

**வடமத்திய மாகாணசபை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2010 ஆம் ஆண்டு**

---

**1. தொலைநோக்கும் பிரதான பணிகளும்**

**தொலைநோக்கு**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினது 13 ஆம் அரசியலமைப்புத் திருத்தம் மற்றும் 1978 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தில் அறிமுகஞ்செய்து வைக்கப்பட்ட பணிகள் கடமைகள் என்பவற்றை நிறைவேற்றுதல்.

**பிரதான பணிகள்**

(அ) மத்திய அரசின் சட்டம், ஒழுங்கு தொடர்புபட்ட நடவடிக்கைகளுக்கு பாதகம் ஏற்படா வண்ணம் மாகாணத்தினுள்ளே பொதுமக்களுக்கிடையே சமாதானத்தைப் பேணுவதற்காக பொலிஸ் அதிகாரங்களை அமுலாக்கல்.

(ஆ) மாகாணத்திற்குரிய பொருளாதாரத் திட்டத்தை தயாரித்து அமுலாக்கலும் நிச்சயமற்ற பாடசாலைகளுக்கு வசதிகளை வழங்குதலும் மாகாணத்தில் சுகாதார சேவை நடவடிக்கைகளைப் பேணுதல்.

(இ) உள்ளூராட்சி நிறுவனங்களை நிர்வகித்தலும் மேற்பார்வையிடலும்

(ஈ) கமத்தொழில், தொழில்நுட்பம், வணிகம் மற்றும் வர்த்தக முயற்சிகளும் வருமானச் செயற்திட்டங்களும் அரச மற்றும் கூட்டுத்தாபனங்களதும் அந் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாதவாறு திட்டமிட்டு அமுலாக்கல்.

(உ) மாகாணத்தினுள்ளே வீதிகள் அடங்கலாக உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் விவசாய, கைத்தொழில் சேவை நடவடிக்கைகளை

முன்னேற்றுதலும் உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதலும் சிறு நீர்ப்பாசனத்தைப் பேணுதலும் புனரமைத்தலும்.

**2. வருடாந்த செயல் திட்டம்**

வடமத்திய மாகாணசபை நிதியாண்டின் ஆரம்பத்தில் வருடாந்த செயல்திட்டத்தைத் தயாரித்திருக்கவில்லை.

**3. கணக்குகள்**

**3.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

வடமத்திய மாகாணசபையினால் தயாரிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் அவை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிலைமை வருமாறு.

| கணக்கின் பெயர் | கணக்கு இலக்கம் | 2011 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு கணக்குகளைக் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் |
|---|---|---|
| ஒதுக்கீட்டுக் கணக்கு | 317 | சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

**3.2 மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

வடமத்திய மாகாணசபைக்கான மொத்த நிகர நிதியேற்பாடு ரூபா 10,830,350,000 ஆகும். மீளாய்வாண்டு முடிவில் அதில் ரூபா 10,681,444,683 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, சேமிப்பு ரூபா 148,905,317 ஆகும். அது மொத்த தேறிய நிதியேற்பாட்டின் 1.4% ஆகும். விபரம் கீழே காணப்படுகின்றது.

| செலவின் தன்மை | வருடாந்த மொத்த மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு | தேறிய நிதியேற்பாடு | செலவினம் | சேமிப்பு திசெம்பர் 31 இல் உள்ளவாறு | சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டுவருபவை | 7,300,000,000 | 7,300,000,000 | 7,300,000,000 | இல்லை | - |
| மூலதனம் | 2,609,850,000 | 3,530,350,000 | 3,381,444,683 | 148,905,317 | 4.2 |
| மொத்தம் | 9,909,850,000 | 10,830,350,000 | 10,681,444,683 | 148,905,317 | 1.4 |

## 3.3 கணக்காய்வு மற்றும் கணக்காய்வு நோக்கெல்லை

வடமத்திய மாகாண சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இணைக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 மே 13 ஆந் திகதியன்று பிரதித் தலைமைச் செயலாளருக்கு(நிதி) அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் கணக்கிணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறானவை.

## 3.4 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்

---

ஒதுக்கீட்டுக் கணக்கானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பினது 148, 149, 150, 152 ஆகிய உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு ஏற்ப பேணப்படுதல், தயாரிக்கப்படுதல் மற்றும் நியாயபூர்வமாக சமர்ப்பிக்கப்படுதல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய போதியளவு பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல், நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடலும், அமுல்படுத்தலும் பேணிவருதலும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 3.5 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புரைகள்

---

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்கள் மற்றும் புத்தகங்கள் என்பவற்றின் பிரகாரம், வடமத்திய மாகாண சபை அலுவலகத்தின் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையில் (அ) தொடக்கம் (இ) வரையிலான பொது அவதானிப்புரைகள் மற்றும் 3.6 இல் சுட்டிக்காட்டப்பட்ட அவதானிப்புரைகள் நீங்கலாக, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதென அவதானிக்கப்படுகின்றது.

### (அ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதி குறைவாகப் பயன்படுத்தப்படுதல்

---

யுனிசெப் மானியம், வீதித் துறை அபிவிருத்திச் செயற்திட்டம் (மீளளிப்புச் செய்யப்படும் வெளிநாட்டுக் கடன்) மற்றும் ஐக்கிய நாடுகள் குடிசன மதிப்பீட்டுச் செயற்திட்டம் என்பவற்றிற்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூபா 68,450,000 ஆகும். இதில், ரூபா 33,074,774 கூட்டுத்தொகை அல்லது 48.32% நிதியேற்பாடு பயன்படுத்தப்படாதிருந்தது.

**(ஆ) இணக்கமின்மை**

ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் ரூபா 910,751,742 குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், குறைநிரப்பு 5 அனுமதிப் பத்திரங்களின் மூலம் ரூபா 920,500,000 தொகையான மூலதன நிதியேற்பாடு பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(இ) பொறுப்புக்கள்**

மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி, வெளிநாட்டுக் கடன் உள்ளூர் நிதியம், யுனிசெப், ஐக்கிய நாடுகள் குடிசன மதிப்பீட்டுச் செயற்திட்டம் குறித்து நோக்கின் அடிப்படையிலானவை மற்றும் நவோதய போன்ற நிதியேற்பாடுகளின் கீழ் ஒதுக்கப்பட்ட தேறிய நிதி ரூபா 3,530,350,000 ஆகும். இதில், பெறப்படாத தொகை ரூபா 148,905,317 ஆகும். இது ஒதுக்கீட்டுக் கணக்கில் பொறுப்பாகக் காட்டப்பட்டபோதும் அவ் ஏற்பாட்டை வழங்குவதாக பொதுத் திறைசேரியிடமிருந்து உத்தரவாதம் பெறப்பட்டிருக்கல்லை.

## 3.6 செயற்திறன்

மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியம் மற்றும் குறித்த நோக்கின் அடிப்பிடையிலான மானியத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டில் அமுலாக்குவதற்குத் திட்டமிடப்பட்ட மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 2,045,295,673 க்கான முடிவுறாத மற்றும் புதிய அபிவிருத்திச் செயற்திட்டங்கள் 2025 இல் இதில் கைவிடப்பட்டதும் 50% இற்குக் குறைவான பௌதீக முன்னேற்றத்தைக் காண்பிக்கும் செயற்திட்டங்களின் எண்ணிக்கை 82 ஆகும்.